# மெட்ரோ ரயில் சேவை: 3 மாதங்களில் 19.21 லட்சம் பேர் பயணம்



**சென்னை, டிச.1:** கரோனா பொது முடக்கம் தளர்வுக்கு பின்பு, சென்னையில் மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்பட்டு, மூன்று மாதத்தில் (செப்.7 முதல் நவ.30 வரை) 19 லட்சத்து 21 ஆயிரத்து 962 பேர் பயணம் செய்துள்ளனர். குறிப்பாக, செப்டம்பர், அக்டோபர் ஆகிய மாதங்களை விட நவம்பரில் அதிக மக்கள் மெட்ரோ ரயிலில் பயணம் செய்துள்ளனர்.

சென்னைமெட்ரோரயில்சேவை 5 மாதங்களுக்கு பிறகு, கடந்த செப்டம்பர் 7-ஆம் தேதி தொடங்கியது. முதல்கட்டமாக, விமானநிலையத்தில் இருந்து வண்ணாரப்பேட்டை வரையும், இரண்டாம் கட்டமாக, பரங்கிமலையில் இருந்து கோயம்பேடு வழியாக சென்னை சென்ட்ரல் வரையும் மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டன. மெட்ரோ ரயில் சேவை தொடங்கியபோது, குறைவான மக்கள் தான் பயணம் செய்தனர். பொதுமக்கள் பாதுகாப்பாக பயணிக்கும் விதமாக,

பல்வேறு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்பிறகு, பயணிகள் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தது.

இந்நிலையில், மெட்ரோ ரயில்களில் செப்டம்பர் 7-ஆம் தேதி முதல் நவம்பர் 30-ஆம்தேதி வரை மூன்று மாதத்தில் 19 லட்சத்து 21 ஆயிரத்து 962 பேர் பயணம் செய்துள்ளனர். செப்டம்பர் மாதத்தில் 24 நாள்களில் 3 லட்சத்து 60 ஆயிரத்து 193 பேரும், அக்டோபரில் 7 லட்சத்து 3 ஆயிரத்து 223 பேரும், நவம்பரில் 8 லட்சத்து 58 ஆயிரத்து 546 பேர் பயணம் செய்துள்ளனர். அதிலும், நவம்பர் 23-ஆம் தேதியில் 38,615 பேர் பயணம் செய்துள்ளனர்.

இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியது: நவம்பர் மாதத்தில், கியூ ஆர் குறியீடு பயணச் சீட்டு முறையைப் பயன்படுத்தி 21,579 பேர் பயணம் செய்துள்ளனர். மேலும், பயண அட்டை பயணச் சீட்டு முறையை (Travel Card Ticketing System) பயன்படுத்தி 4 லட்சத்து 72 ஆயிரத்து 027 பேர் பயணம் செய்துள்ளனர்.

மெட்ரோ ரயிலில் பயணிப்பவர்களுக்கு கியூ ஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டில் ஒருவழிப் பயண அட்டை, இருவழிப் பயண அட்டை, பலவழிப் பயண அட்டை ஆகியவற்றில் கடந்த செப்டம்பர் 11 முதல் 20 சதவீதம் தள்ளுபடி அளிக்கப்படுகிறது.

ஏற்கெனவே, செயல்பாட்டில் உள்ளபடி, மெட்ரோ ரயில் பயண அட்டைகளைப் (Travel Card) பயன்படுத்தி பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்கு 10 சதவீதம் கட்டணத் தள்ளுபடி வழங்கப்படுகிறது.

கரோனா நோய்த்தொற்றைத் தடுப்பதற்காகவும், அனைத்துப் பயணிகளின் பாதுகாப்பான பயணத்துக்காகவும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பயணச்சீட்டு வழங்கும் முறை மற்றும் அனைத்து விதிகளையும் பயணிகள் பின்பற்ற அறிவுறுத்தி வருகிறோம் என்றனர்.